செ.வெ.எண்: 559/2020 நாள் : 15.08.2020

## கன்னியாகுமரி மாவட்டம்
## இன்று நடைபெற்ற 74-வது சுதந்திர தின விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் தேசியக்கொடியினை ஏற்றி வைத்து, 4 பயனாளிகளுக்கு ரூ.2.08 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், அறிஞர் அண்ணா விளையாட்டரங்க மைதானத்தில் இன்று (15.08.2020) 74-வது சுதந்திர தின விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, தேசியக்கொடியினை ஏற்றி வைத்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வி.பத்ரி நாராயணன் இ.கா.ப., அவர்கள் முன்னிலையில், காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்கள். பின்னர், சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் வண்ண பலூன்களையும் பறக்கவிட்டார்கள்.

இன்று நடைபெற்ற சுதந்திர தினவிழா நிகழ்ச்சியில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், 1 பயனாளிக்கு நலவாரிய ஈமசடங்கு நிவாரணத்தொகையாக ரூ.17 ஆயிரமும், ஊரக வளர்ச்சித்துறை சார்பில், முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின்கீழ் 1 பயனாளிக்கு ரூ.1 இலட்சத்து 80 ஆயிரத்துக்கான காசோலையும், தோட்டக்கலைத்துறை சார்பில், தேசிய தேட்டக்கலை இயக்கத்தின்கீழ், நல்லமிளகு பயிர் பரப்பு விரிவாக்கத்திற்காக (0.50 ஹெக்டேர்) 1 பயனாளிக்கு ரூ.10 ஆயிரமும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் சார்பில், விதவை உதவித்தொகை திட்டத்தின்கீழ், 1 பயனாளிக்கு மாதம் ரூ.1 ஆயிரமும், என மொத்தம் 4 பயனாளிகளுக்கு ரூ.2.08 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

அதனைத்தொடர்ந்து, கொரோனா தடுப்பு பணிகளில் சிறப்பாக பணியாற்றிய 351 அரசு அலுவலர்களுக்கு நற்சான்றிதழ்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.ரேவதி, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையாளர் திருமதி.ஆஷா அஜித், இ.ஆ.ப., மாவட்ட ஊராட்சித்தலைவர் மரு.எஸ்.மெர்லியன்ட் தாஸ், சார் ஆட்சியர் திருமதி.சரண்யா அறி இ.ஆ.ப., (பத்மநாபபுரம்), மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திருமதி.எம்.ஜாண்சிலின் விஜிலா, அரசு உயர் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.